




# ஊடகக் கற்கைகள் மாணவர்களின் ‘ஆவணப்பட விழா - 2023’ நேற்று

**(பிரபாகரன் டிலக்சன்)**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை 4ஆம் வருட மாணவர்களின் ‘ஆவணப்பட விழா -2023’ நேற்றைய தினம் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் கைலாசபதி கலையரங்கில் கலைப்பீட பீடாதிபதி கலாநிதி சி.ரகுராம் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குனராஜா கலந்து கொண்டார்.

இதன் போது தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் 10 ஆவணப்படங்கள் திரையிடப்பட்டன.

இந் நிகழ்வில் ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் பூங்குழலி, விரிவுரையாளர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





